Written by - வ.ந.கிரிதரன் -
Tuesday, 05 January 2021 13:05 - Last Updated Friday, 08 January 2021 02:35

இலங்கைத் தமிழ் இலக்கியத்துக்கு வளம் சேர்த்த சஞ்சிகைகளில் முக்கியமான சஞ்சிகை இது. யாழ்ப்பாணத்தில் 'மறுமலர்ச்சி' சஞ்சிகை அச்சில் வெளியாவதற்குச் சில மாதங்களுக்கு முன் வெளியான சஞ்சிகை. அச்சஞ்சிகைதான் எழுத்தாளர்கள் கே.கணேஷ், கே.ராமநாதன் ஆகியோர் ஆசிரியர்களாக இணைந்து வெளியிட்ட 'பாரதி' சஞ்சிகை. ''இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்'' நூலை எழுதிய முனைவர்கள் சி. மௌனகுரு, மௌ. சித்திரலேகா & எம். ஏ. நுஃமான் ஆகியோர் இச்சஞ்சிகையின் முக்கியத்துவத்தை உணர்ந்ததாகத் தெரியவில்லை. அதனால்தான் அவர்களது ஆய்வு நூலில் இச்சஞ்சிகை பற்றி 'பாரதியில் கட்டுரைகள் வெளிவந்தன' என்று ஒரு வரி மட்டுமே காணப்படுகின்றது. இவர்கள் பாரதியை மறைத்ததற்கு முக்கிய காரணங்களிலொன்றாக நான் கருதுவது இலங்கைத் தமிழிலக்கியத்தில் முற்போக்குத் தமிழிலக்கியத்துக்குப் பாரதியாற்றிய பங்களிப்புத்தான். இவர்கள் யாருமே இதுவரையில் இலங்கை முற்போக்குத் தமிழ் இலக்கியத்துக்கு வளம் சேர்த்த இலக்கிய முன்னோடிகள் பற்றி இதுவரையில் விரிவான ஆய்வுக் கட்டுரைகள் எவற்றையும் நானறிய எழுதவில்லை. அந்த அடிப்படையில் இவர்கள் பாரதி சஞ்சிகையின் முக்கியத்துவத்தையும் புறக்கணித்திருக்கலாம் அல்லது மறைத்திருக்கலாம் என்றும் கருதவேண்டியுள்ளது.

இவர்கள் பாரதி சஞ்சிகையின் முக்கியத்துவத்தை மறைத்தாலும் பேராசிரியர் கா.சிவத்தம்பி, எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் , எழுத்தாளர் நந்தினி சேவியர் மற்றும் எழுத்தாளர் டொமினிக் ஜீவா போன்றோர் மறக்கவில்லை. தெளிவத்தை ஜோசப் தினகரனில் 'ஈழத்து முற்போக்கு இலக்கியப் பரம்பரைக்கு வித்திட்ட 'பாரதி' என்னும் தலைப்பில் முக்கியமானதோர் ஆய்வுக் கட்டுரையினை எழுதியுள்ளார் . அக்கட்டுரை தினகரனில் செப்டம்பர் 1984 - நவம்பர் 1984 வரை வெளியாகியுள்ளது.
இக்கட்டுரையினை எழுத்தாளர் டொமினிக் ஜீவா தொகுத்து மல்லிகைப்பந்தல் வெளியீடாக வெளியிட்ட "நெஞ்சில் நிலைத்திருக்கும் சில இதழ்கள்'' கட்டுரைகளின்

Written by - வ.ந.கிரிதரன் -
Tuesday, 05 January 2021 13:05 - Last Updated Friday, 08 January 2021 02:35

தொகுப்பு நூலில் உள்ளடக்கியுள்ளார்.

இந்நீண்ட கட்டுரையின் ஆரம்பத்தில் பாரதி பற்றிய பேராசிரியர் கா.சிவத்தம்பியின் கூற்றினைத் தெளிவத்தை ஜோசப் சுட்டிக்காட்டியுள்ளார்:

"'[illegible]'[illegible]."' 1946-[illegible] [illegible] ([illegible]* - 1975)* [illegible] *1946-*[illegible] [illegible] ‘[illegible]’[illegible]."*

இந்நிலையில் தெளிவத்தை ஜோசப் அவர்கள் "ஈழத்து முற்போக்கு இலக்கியப் பரம்பரைக்கு வித்திட்ட 'பாரதி'" என்று சரியாகவே தனது கட்டுரைக்குத் தலைப்பிட்டிருக்கின்றார். தை 1946 தொடக்கம் ஆகஸ்ட் 1946 வரை மொத்தம் ஐந்து இதழ்கள் (இவற்றில் மூன்று, நான்காவது இதழ்கள் ஒன்றாக பங்குனி - சித்திரை 1946 வெளியாகியது) வெளியாகியுள்ளன. ஐந்தாவது இதழ் ஆகஸ்ட் 1946இல் வெளியானது. பின்னர் இறுதி இதழான ஆறாவது இதழ் மார்கழி -தை 1948இல் வெளியானது.

எழுத்தாளர் நந்தினி சேவியர் தமிழ் இனி 2000 கருத்தரங்கில் சமர்ப்பித்த 'கடந்த நூற்றாண்டின் ஈழத்து மார்க்சிய இலக்கியம்'' என்னும் ஆய்வுக் கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கின்றார்:

"1946 இல் கே. கணேஸ், கே. ராமநாதன் போன்றவர்களால் வெளியிடப்பெற்ற "பாரதி" என்னும் சஞ்சிகையே தமிழின் முதல் முற்போக்குச் சஞ்சிகை என கருதப்படுகின்றது. இதன் ஆசிரியர்கள் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களாகும். கே. ராமநாதன் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் பத்திரிகையான `தேசாபிமானி'யின் ஆசிரியராகவும் விளங்கினார். இலங்கை எழுத்தாளர் சங்கத்தை 1947 இல்

உருவாக்கியவர்களும் இவர்களே. `பாரதி' சஞ்சிகையில் அ.ந. கந்தசாமி, அ.செ. முருகானந்தன், கே. கணேஸ், மஹாகவி போன்றவர்கள் எழுதியுள்ளனர்"

பாரதி இதழ்களில் ஈழத்து முற்போக்கு இலக்கிய முன்னோடியான எழுத்தாளர் அ.ந.கந்தசாமியின் ஐந்து படைப்புகள் வெளியாகின. அவற்றின் விபரங்கள் வருமாறு:

[illegible]:

1. வழிகாட்டி - தை 1946 பாரதி
2. உதவி வந்தது. - மாசி 1946 பாரதி

"சீனாவின் ஒரு கோடியில் லயொங் நகரில் நடந்த உண்மைச் சம்பவம் பற்றியது 'உதவி வந்தது'. சீன உள்நாட்டுப் போரில் நடந்த ஒரு நிஜ சம்பவத்தைக் கதையாகப் பின்னியுள்ளார் அ.ந.கந்தசாமி" என்று கட்டுரையில் தெளிவத்தை ஜோசப் குறிப்பிட்டுள்ளார்.

[illegible] ([illegible]) [illegible] [illegible] [illegible]:

1. [illegible] [illegible]. [illegible] [illegible] - [illegible] 1946

"தேயிலைத் தோட்டத்திலே துயரம் தோய வாழும் தொழிலாளத் தாயின் மனத்தைப் படம் பிடித்துக் காட்டும் கவிதை 'தேயிலைத் தோட்டத்திலே'. அ.ந.கந்தசாமி 'கவீந்திரன்' என்னும் பெயரில் இந்தக் கவிதையை எழுதியுள்ளார். லெனினுடன் பழகிய வில்லியம் கலச்சர் எழுதிய 'ஜனநாயகம் என்றால் என்ன?' என்னும் நூலை கவீந்திரன் மொழிபெயர்ப்பில் தமிழில் பாரதி பிரசுரம் வெளியிடப் போவதாக பின் அட்டையில் ஓர் அறிவிப்பு இருக்கிறது. பாரதி பிரசுரம் என்று நூல்கள் வெளியிடும் எண்ணமும் பாரதிக்கு இருக்கிறது என்பதையே இது காட்டுகிறது." - தெளிவத்தை ஜோசப் ("ஈழத்து முற்போக்கு இலக்கியப் பரம்பரைக்கு வித்திட்ட 'பாரதி'" கட்டுரையில்.)

2. [illegible] [illegible] - [illegible] - [illegible] ([illegible].[illegible].[illegible]) - [illegible] 1946

"இந்தக் கவிதையின் அழைப்பும் நாம் மேலே கண்ட எழுத்தாளர்களுக்கான பிந்திய அழைப்பும் ஏறத்தாழ ஒத்திருக்கின்றன. ஆகவே முற்போக்கு இலக்கியப் பரம்பரைக்கு அப்போதே பாரதி வித்திட்டிருக்கிறது என்பது புலனாகின்றது. முன்னேற்றச்
சேனையிலே சேர வாருங்கள் என்ற கவிதை மூலம் அழைப்பு விடுத்தவர் அ.ந,.கந்தசாமியேதான். " - தெளிவத்தை ஜோசப் ("ஈழத்து முற்போக்கு இலக்கியப் பரம்பரைக்கு வித்திட்ட 'பாரதி'" கட்டுரையில்.)

[illegible] [illegible]: [illegible] 1946[illegible] [illegible] [illegible] [illegible]:

”[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible].[illegible].[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. ‘[illegible] [illegible] [illegible] *([illegible] [illegible] [illegible]*

[illegible]) [illegible]. '1925-[illegible] ’[illegible] ?” [illegible] [illegible] ’[illegible] தெளிவத்தை ஜோசப் ("ஈழத்து முற்போக்கு இலக்கியப் பரம்பரைக்கு வித்திட்ட 'பாரதி'" கட்டுரையில்)

மேற்படி பாரதி சஞ்சிகையில் வெளியான அ.ந.கந்தசாமியின் படைப்புகள் அனைத்தும் 'பதிவுகள்' இணைய இதழிலும் வெளியாகியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. பாரதி சஞ்சிகையின் பிரதிகளை யாராவது வைத்திருப்பின் அவற்றைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.

முன்னவர்கள் சிலர் மறைத்தாலும், இருட்டடிப்பு செய்தாலும் முழுநிலவை மேகங்களால் ஒருபோதுமே மறைத்துவிட முடியாது என்பதற்கொப்ப இலங்கை முற்போக்குத் தமிழ் இலக்கியம் பற்றியும், அதன் முன்னோடிகள் பற்றியும் எழுத்தாளர்களான தெளிவத்தை ஜோசப், அந்தனி ஜீவா மற்றும் டொமினிக் ஜீவா போன்றோர் அவ்வப்போது பதிவு செய்துகொண்டுதான் வருகின்றார்கள். அதற்காக தமிழ் இலக்கிய உலகு அவர்களைப்போன்றவர்களுக்கு எப்பொழுதும் நன்றியுடனிருக்கும்.

மேற்படி நெஞ்சில் நிலைத்திருக்கும் சில இதழ்கள்' தொகுப்பு நூலை வாசிக்க: http://noolaham.org/wiki/index.php/%E0%AE%A8%E0%AF%86%E0%AE%9E%E0%AF%8D%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B2%E0%AF%8D_%E0%AE%A8%E0%AE%BF%E0%AE%B2%E0%AF%88%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%81%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D_%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B2_%E0%AE%87%E0%AE%A4%E0%AE%B4%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D